**கவனிக்க.–** *2019.10.25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2148 - 2019 නොවැම්බර් මස 01 වැනි සිකුරාදා - 2019.11.01

*2148 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 220 |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |



**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2019, நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*



219-B81574-353(2019/11)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## மக்கள் வங்கி

மாரவில மாவட்ட நீதிமன்றின் 30/2019 இன் கீழ் பிசுக்கால் மூலம் செய்யப்படுகின்ற ஏல விற்பனை

பெறுமதியான ஆதனம் ஒன்றினை பிரசித்த ஏல விற்பனை மூலம் விற்பனை செய்தல்

எதிர்:

194MB ஆம் இலக்க வழக்கு

1. சனுாரி ஒடோ இன்டர்நெஷனல் மட்டுப்படுத்தப்பட்ட தனியார் நிறுவனம்
2. யாப்பா அப்புஹாமிலாகே கபில சமன்த யாப்பா

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், மாரவில காணிப் பதிவகப் பிரிவிற்கு உற்பட்ட பிடிகல் கோரளை தெற்கு யடகலன் பத்துவ, நாத்தாண்டிய பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள மஹவெல பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மஹவெவ கிராம அலுவலர் பிரிவு, மஹவெவ என்ற கிராமத்தில் அமைந்துள்ள ''தன்வல அகார'' என்ற காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. ஏ. ஏ. விமலசேன அவர்களால் 2006.10.31 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 3512A ஆம் இலக்க வரைபடத்தில் 01 ஆம் இலக்க காணிக்கான எல்லைகள் - வடக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. எம். ரி. பிரனாந்து அவர்களின் 3035 ஆம் இலக்க வரைபடத்தின் 01 ஆம் இலக்கக் காணி ; கிழக்கு : அநுலா அமரதுங்க மற்றும் சீலவதி அமரதுங்கவுக்குச் சொந்தமான காணியும் எம். ஏ. தயானந்தவிற்குச் சொந்தமான காணியும் ; தெற்கு : டபிள்யூ. ஜி. சேதிரிஸ் அப்புஹாமிக்குச் சொந்தமான காணியும், ஆர். ஜி. எலோசிங்ஹோவிற்குச் சொந்தமான காணியும்; மேற்கு : ஆர். ஜி. எலோசிங்ஹோவுக்குச் சொந்தமான காணியும் பிரதேச சபைப் பாதையும் என்ற எல்லைகளுக்குட்பட்ட இரண்டு றூட் இருபத்திமூன்று பேர்ச் (0ஏ. 2றூ. 23பே.) எனப்படும் பூச்சியம் தசம் இரண்டு ஆறு பூச்சியம் ஆறு ஹெக்டேயர் (0.2606 ஹெக்.) விஸ்தீரணமுள்ள காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழ வகை, கட்டிடங்கள் உட்பட அனைத்தும் அடங்கலாக.

காணியின் அளவு 0ஏ. 2றூ.23பே.
இது மாரவில காணிப் பதிவகத்தில் K 110/149 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆதனத்தை செல்லும் பாதை**.- A3, பிரதான பாதையின் ஊடக மஹவெவ விஹாரை சந்தி வரை சென்று அந்த சந்தியால் (59 ஆம் கிலோ மீற்றர் கட்டை) இடதுபக்கம் திரும்பி விஹாரை வீதியில் சுமார் 400 மீற்றர் அளவு செல்லும் போது T சந்தி சந்திக்கும், அவ்விடத்தால் இடதுபக்கம் திரும்பி சுமார் 250 அளவு சென்று மீண்டும் இடது பக்கம் திரும்பி செல்லும் போது அப்பாதையில் யாப்ப ஸ்டோர்ஸ் அமைந்துள்ள வளவுக்கு அருகில் இடது பக்கமாக குறிப்பிட்ட ஆதனம் அமைந்துள்ளது.

2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை பி. ப. 2.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பிரதி பிஸ்கால் மூலம் ஏல விற்பனை செய்யப்படும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை**.-ஏல விற்பனையின் இறுதியில் ஆதனத்தை கொள்வனவு செய்தவர் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு பணத்தைச் செலுத்தல் வேண்டும்.

(1) கொள்முதல் விலையின் (நூற்றுக்கு இருபத்தைந்து சதவீதம்) 25%;
(2) மாகாண அதிகார சபையின் வரியாக (நூற்றுக்கு ஒன்று) 1%;
(3) பிஸ்கல் கமிஷன், சிவில் நடைமுறைச் சட்டத்தின் 258 ஆம் பிரிவின் பிரகாரம் பிஸ்கல் கமிஷன் ;
(4) அனைத்து விளம்பரக் கட்டணங்கள்;
(5) எழுதுவினைஞர் அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500;
(6) விற்பனைச் செலவுகள், வேறு கட்டணங்கள் இருப்பின் அந்தப்பணம்;
(7) விற்பனை அத்தாட்சிப்பத்திரத்துக்கான முத்திரைக் கட்டணம்.

குறிப்பிட்ட ஆதனத்தின் விற்பனை நீதிமன்றின் அங்கீகாரத் துடன் நடைபெறுகின்றது.

வாங்கிய விலையின் மிகுதி 75% மான பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

மேற்கண்டவாறு பணத்தை 30 நாட்களுக்குள் மேற்குறிப்பிடப்பட்ட முழுத்தொகையையும் செலுத்தாவிடின் ஏற்கனவே செலுத்திய பணத்தை திருப்பிச் செலுத்தாமல் விடவும். மீண்டும் ஆதனத்தை ஏல விற்பனையின் மூலம் விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

உரிமைப் பத்திரம் வேறு விபரங்களை பரிசீலிப்பதற்கும் மேலதிக விபரங்களையும் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய பிரதான அலுவலகம் (முதலாம் மாடி) இல. 79, மாரவில வீதி, நாத்தாண்டிய என்ற முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும்.

தொலைபேசி இல. : 032-225300, 032-2253301,
தொலைநகல் இல. : 032-2255247

பதிவாளர் /பிரதி பிசுக்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
மாரவில.

11-894